2. அறிவிப்பு

அ. பேரவை அலுவலில் மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே, பேரவைக்கு அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப் படுகின்றன:—

(1) 28–7–1980 திங்கட்கிழமையன்று எடுத்துக் கொள்வ தாக அறிவிக்கப்பட்டிருந்த கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் 24–7–1980 வியாழக்கிழமையன்று எடுத்துக் கொள்ளப்படும்.

21—மீனளம்

35—நுகர்பொருள் வழங்கல்

(2) 24–7–1980 வியாழக்கிழமையன்று எடுத்துக் கொள்வ தாக அறிவிக்கப்பட்டிருந்த கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் 28–7–1980 திங்கட்கிழமையன்று எடுத்துக் கொள்ளப்படும்.

36 –பாசனம்

50—பாசனம் குறித்த மூலதனச் செலவு

3. தகவல் கோரல்

நாடாளு மன்ற உறுப்பினர் திரு. தினேன் பட்டாச் சாரியா மரணம்—விடுமுறை அளிப்பது

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சுதந்திரப் போராட்ட வீரர், தொழிற்சங்க முன்னணித் தலைவர், தினேன் பட்டாச்சாரி, எம். பி., இறந்திருக்கிறார்கள். சஞ்சய் காந்திக்கு விடுமுறை விட்டதுபோல் இவருக்கும் விடுமுறை விடப்படுமா? இவர் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இறந்தவருக்கு அஞ்சலி செலுத்துவதை மனதால் செலுத்த வேண்டும். ஒவ்வொரு வருக்கும் விடுமுறை விட்டுக் கொண்டே இருந்தால் விடுமுறைவிட நாளே இருக்காது. தினேன் பட்டாச்சாரிக்கு உண்மையிலேயே மரியாதை செலுத்தவேண்டுமென்றால் அவர்கள் இறந்த நாளில் அதிகமான வேலை செய்ய வேண்டும். மறைந்த பட்டாச்சாரி அவர்கள் சாகிற வரை ஓயாது ஒழியாது உழைத்தவர்.

*குறிப்பு.—[ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1980 ஜூலை 16]

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டதிலே ஆழமான பொருள் இருக்கிறது. தினேன் பட்டாச்சாரியை உங்களுக்கும் தெரியும், எங்களுக்கும் தெரியும். ஏற்கனவே ஒரு பிரிசிடென்ட் இருக்கிறது—சஞ்சய் காந்தி எம். பி. இறந்ததற்கு ஹவுசை அட்ஜர்ன் பண்ணி யிருக்கிறோம். இப்போது மறைந்துவிட்ட தினேன் பட்டாச்சாரி பொதுமக்களுக்காக உழைத்து இறந்தவர். அவர் இறந்ததற்கு மரியாதை செலுத்தும் வகையில் பேரவையை ஒத்தி வைப்பது நியாயம். தலைவர் சொல்லுகின்ற பதில் கன்வின்சிங்காக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதனை விவாதப்பொருள் ஆக்கக் கூடாது. திரு. தினேன் பட்டாச்சாரி நல்ல அளவில் நாட்டுக்காகச் சேவை செய்தவர். அவர்கள் செய்த சேவையை நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், நாடாளு மன்றத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் மறைவுக்கு சபையை ஒத்திவைப்பது மரபாக இல்லை. திரு. சஞ்சய் காந்தியின் மரணம் எதிர்பாராமல் ஏற்பட்டதன காரணமாக விடுமுறை அறிவிக்கப்பட்டது.

திரு. ரா. உமாநாத் : மரணம் எதிர்பாராமல்தான் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மரணம் எதிர்பாராமல் வருவதுதான். திருக்குறளிலேயே உலகின் பெருமையை அந்த வகையிலே எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. திரு. சஞ்சய் காந்தியைப் பொறுத்தவரை பிரதம மந்திரியின் மகன், எதிர் பாராது விமான விபத்தில் இறந்து விட்டார், நாடே துக்கத்தில் ஆழ்ந்தது. ஆக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறைவுக் கெல்லாம் சட்டசபையை ஒத்தி வைத்துக் கொண்டிருக்க முடியாது. அதே போன்று சட்டமன்ற உறுப்பினர்கள் மறைவுக் காக நாடாளுமன்றத்தை ஒத்தி வைக்க வேண்டுமென்றும் கேட்க வும் முடியாது. எவ்வளவு பெரிய முக்கியஸ்தராக இருந்தாலும் வருத்தத்தை நாம் தெரிவித்துக் கொள்கிறோம். அவ்வளவு தானே தவிர சபையை ஒத்தி வைக்க வேண்டும் அல்லது விடுமுறை விட வேண்டும் என்று சொல்வது சரியல்ல.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நாங்கள் இங்கே பிரதிபலிக்கின்ற எண்ணங்களை தயவு செய்து தாங்கள் முதல் மைச்சரிடம் கன்வே பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய உணர்வுகளை கட்டாயம் முதலமைச்சரிடம் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன், சொல்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. உரிமைப் பிரச்சினை

இந்துப் பத்திரிகை மீதும், திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியம் மீதும்.

அடுத்து, அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து 246 வது விதியின் கீழ் டாக்டர் கே. சௌரிராஜன் அவர்கள் இந்த அவையிலே எழுப்ப அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

டாக்டர் கே. சௌரிராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, I move the following motion of privilege for examination.

Where as in the Hindu dated 1st July 1980 in page 8, column 5, under the heading of Secretariat of the Legislature, one Mr. R.K. Balasubramaniam of Madras has alleged that as long as the veteran parliamentary authority. Mr. R. V. Krishna Ayyar etc. . . . .

And Where as the statement published in the "Hindu" attempts to project thev iew that ofter 1955 till today the Madras Legislature has lost its independence, originality and is under the control of the Government.

Whereas this viewt is totally baseless, false and attempts to undermine the prestige of the House and derogate the authority of the House.

Whereas a prima facie case of privilege has been made out.

Whereas any other matters affecting the rights, powers and privileges shall have precedence over other business of the House.

I pray that this matter may be examined by a Committee of the House on Privileges and the Committee is directed to report to the ouse before the House adjourns before this budget session,